பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 24 | புதன்கிழமை | 11.10.2023 | அதிர்வு 71

## மணல் டிப்பர் மோதி கான்ஸ்டபிள் சாவு!

மணல் ஏற்றிச் சென்ற பாரவூர்தியில் மோதுண்டு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் – பொல்கஹவெல பிரதான வீதியின் புஹுரிய சந்தியில் இடம்பெற்றுள்ளது 02▶

# ரணிலுக்கு விக்கி காட்டமான மடல்

## அதிருப்தியின் உச்சத்தில் அவர்



**யாழ்ப்பாணம், ஒக்டோபர் 11**

தமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றி, காலத்தை இழுத்தடித்து வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் சீற்றத்தின் உச்சிக்குச் சென்றிருக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், 02▶



# இலங்கை வந்தடைந்தார் ஜெய்சங்கர்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின் மாநாட்டில் கலந்துகொள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கை வந்தடைந்தார்.

மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். அவருடன் இந்திய வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் மூவரும் வந்தனர்.

இந்தியாவின் புதுடில்லியில் 02▶





# மஹிந்தவை விட்டு ஓடியவர்கள் மீண்டும் வந்து இணையலாமாம்

## நாமல் ராஜபக்ஷ பகிரங்க அழைப்பு

“எமக்கு எதிராகச் செயற்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணைய முடியுமாயின் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு பல்வேறு காரணிகளால் பிரிந்து சென்றவர்கள் தாராளமாக மீண்டும் ஒன்றிணையலாம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் நாடாளுமன்ற 04▶

# ரணிலுக்கு எவருமே சவாலாக மாட்டார்கள்

## உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி



“ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறும். தேர்தலைப் பிற்போடும் எண்ணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எவரும் சவாலாக அமையமாட்டார்கள்.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் 02▶




முன்னாள் அமைச்சர் நஸீர் அகமட்டுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் உயர் நீதிமன்றத்தில் நடந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் முஸ்லிம் காங்கிரஸுக்காக முன்னிலையாகி, தம்மை எதிர்த்து நின்ற நான்கு, ஐந்து ஜனாதிபதி சட்டத்தரணிகளையும் தமது வாதத் திறமையால் வீழ்த்தி, தமது கட்சிக்காரருக்கு வெற்றி வாகையை சூடிக்கொடுத்தமையால் 02▶

## ரணிலுக்கு விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்விடயங்களில் தமது அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில், காட்டமான வாசகங்கள் அடங்கிய – தனிப்பட்ட – கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நேரடியாக அனுப்பி வைத்திருக்கின்றார் என்று நம்பகரமாக அறியவந்தது.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்ட விடயங்களின் சாராம்சம் இதுதான்:–

"உங்களின் அண்மைக்கால வெளிநாட்டு விஜயத்தின் முழு வெற்றியையுமே நீங்கள் ஜேர்மன் ஊடகவியலாளருக்கு அளித்த பேட்டி அப்படியே களங்கப்படுத்தி விட்டது. நீங்கள் கடும் போக்குவாத சிங்கள வாக்காளர்களின் ஆதரவை உறுதிப்படுத்துவதற்காக அப்படிச் செய்திருக்க கூடும். ஆனால், அதனால், எதிர்வரும் தேர்தலில் சிங்களவர்கள் அல்லாதவர்களின் கணிசமான – குறிப்பிடத்தக்களவு – வாக்குகளை நீங்கள் இழப்பீர்கள். சிங்கள வாக்குகள் சிங்கள வேட்பாளர்கள் மத்தியில் பிரிக்கப்படுவனவாகிவிடும். தமிழர்களோ பொதுவான தமிழ் வேட்பாளர் ஒருவர் குறித்து சிந்திக்கத் தலைப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது."

– என்று சாரப்பட தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நீதியரசர் விக்னேஸ்வரன், உறுதியளித்த பல விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றாதமையையும் கடுமையாகச் சாடி இருக்கின்றார் எனத் தெரிகின்றது.

"நீங்கள் வாக்குறுதி அளித்த பல விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. மாகாண சபைகள் தொடர்பில் கலாநிதி விக்னேஸ்வரனின் கீழான ஆலோசனை சபையை அதிகாரத்துடன் செயல்பட வைக்கும் ஏற்பாடு நடைபெறவில்லை. ஆளுநர் மாற்றம் நடக்கவில்லை. அதே ஆளுநர் மாறாமல் தொடர்கிறார். வடக்கு மாகாண பிரதம செயலாளரும், மாகாண சுகாதார பணிப்பாளரும் பதவிகளில் தொடர்கின்றனர். எங்கள் ஆதரவாளர்கள் இவற்றால் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்த விடயங்களில் எமக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமல் தாமதமடைவதற்கு யாது காரணம் என நாம் ஐயுறுகின்றோம்.

உங்களுக்கு தமிழர்களின் ஆதரவும் வாக்கும் தேவையில்லை எனின், நீங்கள் அதனை வெளிப்படையாக எங்களுக்குக் கூறலாம். நாங்களும் எங்கள் தரப்பினருக்குத் தொடர்ந்து நம்பிக்கை ஊட்டத் தேவையில்லை;

– என்று சாரப்பட நீதியரசர் விக்னேஸ்வரன் கடிதம் எழுதி இருக்கிறார் என்று தெரிகின்றது.

கலாநிதி விக்னேஸ்வரன் தலைமையில் ஓர் ஆலோசனைச் சபையே மாகாண சபை நிர்வாகத்தை ஆளுநருடன் சேர்ந்து முன்னெடுக்கத்தக்க வகையிலான ஓர் ஏற்பாட்டுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் தரப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணங்கினார் என்று கூறப்படுகின்றது. அந்த ஆலோசனைச் சபைக்கு அதிகாரம் அளிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு, அதனை செப்டம்பர் முதலாம் திகதியில் இருந்து இயக்குவதற்கும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தாராம்.

வடக்கு மாகாண ஆளுநராக 13 ஆவது திருத்த நடைமுறையாக்கம் மற்றும் மாகாண சபை விடயங்களை கையாளக்கூடிய தகுதி உடைய ஒருவரை நியமிக்கவும் ஜனாதிபதி ரணில் நீதியரசர் விக்னேஸ்வரனிடம் உறுதி கூறியிருந்தார் என்று கூறப்படுகிறது.

தமிழ் மொழி அமுலாக்கத்துக்காகவே வடக்கு மாகாண சபை உள்ள நிலையில் அதன் பிரதம செயலாளராக, தமிழ் தெரியாத சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலைமையை மாற்றுவதற்கும் –

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உயர் பதவியை மத்திய அரசின் உயர் அதிகாரியே கையாளும் முறைமையை மாற்றவும் –

நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் வாக்குக் கொடுத்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

அவை தொடர்பில் எந்தவித காத்திரமான நடவடிக்கையும் எடுக்காத ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் கடும் சீற்றம், எரிச்சல் மற்றும் ஏமாற்றத்தில் இருக்கின்றார் எனத் தெரிகின்றது. அதன் விளைவே அவர் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய கடிதம் என்றும் கூறப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹல்ஸ்ட்ரோப் நீதிமன்ற வட்டாரத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு நல்ல மவுசு...!

முன்னாள் அமைச்சர் நஸீர் அகமட்டின் வழக்கை அடுத்து, மற்றைய இரு அமைச்சர்களின் வழக்குகள் சூடு பிடித்திருக்கின்றன. அமைச்சர்கள் ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான அதே பாணி வழக்குகள் நாளையும் மறுதினமும் விசாரணைக்கு வருகின்றன.

தங்களைக் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நீக்கியமை தவறானது என அவர்கள் இருவரும் தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் வழக்குகள்தான் அவை. சுமந்திரனின் வாதத் திறமையால் முன்னாள் அமைச்சர் நஸீர் அகமட் பதவியைப் பறிகொடுத்தமையை ஒத்த வழக்குகள்தான் இந்த இரண்டும்.

இந்த இருவரின் வழக்குகளிலும் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, செயலாளர ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன, சட்டத்தரணி ஹிஜாஷ் ஹிஸ்புல்லா போன்றோர்தான் முன்னிலையாகி வந்தனர். ஆனால் நாளை வழக்கில் முழு விசாரணை தொடங்குகின்றது. நாளை மறுதினமும் அது நீடிக்கும்.

ஆகையினால் முதலாவது பிரதிவாதியான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் பிரசன்னமாகி பிரதான வாதத்தை முன்னெடுக்குமாறு ஒற்றைக் காலில் நின்று வற்புறுத்தி ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை அக்கட்சி ஒழுங்கு செய்திருக்கின்றது.

இந்த வழக்கை விசாரிக்கவிருக்கும் உயர்நீதிமன்ற ஆயமும் நடுநிலைமை – துணிச்சலான முன்மாதிரித் தீர்ப்பு – ஆகியவற்றை வெளிப்படுத்தக் கூடியது என்ற கருத்து நிலைப்பாடும் ஹல்ஸ்ட்ரோப் நீதிமன்ற வட்டாரங்களில் நிலவுகின்றது.

ஆக, கள நிலைமை, சுவாத்தியம் எல்லாம் சுமந்திரனுக்கு சாத்தியமாக – சாதகமாக – உள்ளன.

ஏற்கனவே ரணில் தரப்பில் ஒரு விக்கெட் விழுந்துவிட்டது. நாளையும் மறுதினமும் சுமந்திரன் தமது வாதத் திறமையால் வீசப்போகும் பந்துகளில் ரணில் அணியின் அடுத்த இரண்டு விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

\+ \+ \+

'எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் தானும் ஏறி விழுந்தாராம் சக்கடத்தார்...!' என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசனத்துடன் தனிப்பட்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார் என்ற தகவலைக் கேட்டபோது இந்தப் பழமொழி தான் நினைவுக்கு வந்தது.

கடந்த கால் நூற்றாண்டாகத் தொடரும் கதைதான் இது. புதியதல்ல.

2002 – 2004 இல் புலிகள் இந்த ரணில் என்ற குதிரையை நம்பி ஏறிச் சறுக்கி விழுந்தனர்.

2016 – 2019 இல் சம்பந்தனும் சுமந்திரனும் அளவுக்கதிகமாக நம்பி தலைகுப்புறக் கவிழ்ந்தனர். அதனால் இப்போது மிக மிக எச்சரிக்கையாக இருக்கின்றனர்.

இப்போது நமது நீதியரசரின் முறைமை போலும்.

நிலைமை புரியாத சக்கடத்தார் தானும் அதே ரணில் என்ற நொண்டிக் குதிரையில் ஏறத் தடுமாறுகிறார் என்பது தெளிவு.

ஒரேயொரு வித்தியாசம். 2016 – 2019 முழுமையாக ரணிலை நம்பி, அவரது அரசு கவிழாமல் முண்டு கொடுத்து, வெறும் ஏமாற்றத்தையே வாங்கிக் கட்டிக்கொண்டு வந்தோம்.

இப்போது ஆரம்பத்திலேயே – நேரத்துடனேயே – உஷாராகத் தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறார் நவீன சக்கடத்தாரான நம் நீதியரசர். அது சற்று ஆறுதலான விடயம்.

## மணல் டிப்பர் மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பொல்கஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

பொல்கஹவெல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 45 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிளே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு குறித்த கான்ஸ்டபிள் நடமாடும் சேவையில் ஈடுபட்டிருந்த வேளை, வீதியில் வாகனங்களையும் மக்களையும் சோதனை செய்து கொண்டிருந்த போது, கந்தளேயிலிருந்து கடுவலைக்கு மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வீதியோரத்தில் மோதியதில் அவர் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தார்.

அவர் உடனடியாகப் பொல்கஹவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தின் சந்தேகநபரான டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## இலங்கை வந்தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து இந்திய விமானப்படைக்குச் சொந்தமான ஐ.எப்.சி. 31 என்ற விசேட விமானம் மூலம் அவர்கள் நேற்று மாலை 05.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இராஜாங்க அமைச்சர் சுரேன் இராகவன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே தலைமையிலான இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகள் ஆகியோர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் விசேட விருந்தினர் அறைக்கு வந்து ஜெய்சங்கர் குழுவை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

# வெளிநாட்டு அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

## பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சு



இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் கூட்டத்தில் பங்கேற்க இலங்கை வருகை தந்திருக்கும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் இந்து – பசுபிக் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ஏன் – மெரி டெவிலியன் மற்றும் தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நலேட் பெண்டோர் ஆகியோர் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது முதலாவதாக இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் இந்து – பசுபிக் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ஏன் – மெரி டெவிலியனுக்கும் இடையிலான சந்திப்பில் பொருளாதார மீட்சி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.



உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான சட்டமூலம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம் மற்றும் புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலம் உள்ளிட்ட சட்டவாக்க செயற்பாடுகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இலங்கையில் தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கான திட்டம் தொடர்பில் இராஜாங்க அமைச்சருக்குத் தெளிவூட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய இராஜ்ஜியத்தின் பல்கலைக்கழகங்களும் இதனோடு இணைந்துகொள்ளுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதையடுத்து தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நலேட் பெண்டோர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.



உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மேம்பாட்டுக்கு தென்னாபிரிக்கா வழங்கிய ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி அமைச்சரிடத்தில் நன்றி தெரிவித்தார். அது தொடர்பிலான சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் வருட இறுதிக்குள் அதனை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைத்துவத்தை வகிக்கும் காலப்பகுதியில் இந்து சமுத்திரத்தின் தனித்துவத்தை வலுப்படுத்துவதே இலங்கை நோக்கமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

வருடாந்தம் இரு தடவைகள் உறுப்பு நாடுகளின் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்த வேண்டும் எனவும், இந்து சமுத்திரம் தனித்துவமான அரசியல் அடையாளத்தைக் கொண்டுள்ளது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இஸ்ரேல் – ஹமாஸ் போராட்டம் தொடர்பில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இஸ்ரேல் – பாலஸ்தீனத்துக்கு இடையில் சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற தென்னாபிரிக்காவின் கருத்துக்குத்தான் ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தார்.



அதேபோல் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.



# அமெரிக்க இராஜாங்க அதிகாரிகளுடன் முன்னணியின் உறுப்பினர்கள் சந்திப்பு







(எஸ்.நிதர்ஷன்)

ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க அதிகாரிகளைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ், அக்கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி வாசுகி சுதாகர் மற்றும் மகளிர் அணிச்செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

இதன்போது தமிழினத்தின் அபிலாஷைகளையும் அவலங்களையும் அவர்கள் வலியுறுத்தினர்.

# உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு ஜப்பான் அன்பளிப்பு

அவசர பதிலளிப்பு வேலைத்திட்டம், பாடசாலை மாணவர்களுக்கான உணவு வேலைத்திட்டம் மற்றும் தேசிய சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம் என்பவற்றுக்காக ஐக்கிய நாடுகளின் உணவு வேலைத் திட்டத்தின் கீழ் ஜப்பான் அரசால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

ஜப்பானின் வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பிலான நாடாளுமன்ற உப அமைச்சர் கொமுரா மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி ஆகியோருடன் ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ் சமரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்றத்தின் உப அமைச்சர் கொமுரா மசாஹிரோ, பொருளாதார நெருக்கடிகளின் போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க முடிந்தமையையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். நீண்டகால நட்பு நாடு என்ற வகையில் தொடர்ந்தும் இலங்கையுடன் இணைந்து



செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார்.

இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஜப்பான் அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

அதற்கமைய நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருவதாகவும், பாடசாலை உணவு வழங்கல் திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம் என்ற வகையில் விசேட வேலைத்திட்டங்களாக முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

70 வருடங்களுக்கு முன்பாக இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு ஜப்பான் வழங்கிவரும் 10 மில்லியன் பெறுமதியான உணவு பொருட்கள் அன்பளிப்பு இம்முறையும் வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் அரசின் உதவியுடன், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை மட்டுப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் சமரதுங்க சுட்டிக்காட்டினார்.

இதுவரையில் ஜப்பான் அரசால் இலங்கை மக்களுக்காக 7 ஆயிரத்து 270 மெற்றிக் டொன் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும், அதன் கீழ் பாடசாலைகளுக்காகச் சிவப்பு பருப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும், பாடசாலை மாணவர்கள் அதனால் பயனடைவர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மஹிந்தவை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுடன் நேற்று இடம்பெற்ற பேச்சின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"கட்சி என்ற ரீதியில் பலமாகச் செயற்படுகின்றோம். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களுக்குத் தயாராகவே உள்ளோம்.

அதற்கான நடவடிக்கைகளைத் தற்போது முன்னெடுத்துள்ளோம். தேசிய தேர்தல்களில் கட்சியின் கொள்கையை முன்னிலைப்படுத்திச் செயற்படுவோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் கொள்கைக்கு எதிராக 45 வருடகாலம் அரசியல் செய்த ரணில் விக்கிரமசிங்கவை நாட்டுக்காக ஜனாதிபதியாக்கி அவருடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம்.

எமக்கு எதிராகச் செயற்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணைய முடியுமாயின் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு பல்வேறு காரணிகளால் பிரிந்து சென்றவர்கள் தாராளமாக மீண்டும் ஒன்றிணையலாம்.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினர் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாம். அதற்குக் கால வகாசம் வழங்கப்படும். சகல தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் தோற்றம் பெற்றுள்ளது.

எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் கட்டணம் ஒவ்வொரு மாதமும் அதிகரிப்பதால் பொதுமக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்." - என்றார்.

# ஹரீன், மனுஷவின் வழக்குகள் நாளையே விசாரணை ஆரம்பம்

## கட்சி மாறல் சர்ச்சைக்கு விரைவில் முடிவு வரும்



தமது கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானத்தை இரத்துச் செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணையை நாளையே ஆரம்பித்து நாளையும் மறுதினமும் நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று முடிவு செய்தது.

இந்த மனுக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா, மனு தொடர்பான எதிர் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு கோரினார்.

அரசமைப்புச் சட்டத்தின்படி, இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் உயர் நீதிமன்றம் மனுக்களின் விசாரணையை முடிக்க வேண்டும் என்று பிரதிவாதி தரப்பு சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட கருத்துகளைப் பரிசீலித்த உயர்நீதி மன்றத்தின் நீதியரசர்கள் இந்த மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகள் இருந்தால் நேற்றே தாக்கல் செய்யுமாறு மனுதாரர்களின் வழக்கறிஞர்களுக்கு உத்தரவிட்டது.

எனினும் மனுதாரர்களில் ஒருவர் வெளிநாட்டில் இருப்பதால் அவரின் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்ய இன்று வரைக் கால அவகாசம் வழங்கப்பட்டதாக அறிய வந்தது.

ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் கடந்த ஆண்டு மே மாதம் அரசுப் பக்கம் தாவி அமைச்சர்களாகியமையை அடுத்து அவர்களின் கட்சி உறுப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தி இடைநிறுத்தியது. அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை முன்னெடுத்தது. கடந்த ஜூலை 18 ஆம் திகதி அவர்கள் இருவரினதும் கட்சி உறுப்புரிமையை நீக்கி அவர்களுக்கு அறிவித்தது.

அந்த முடிவுக்கு எதிராக இருவரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர். அந்த மனுக்களே நாளையும் மறுதினமும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

# பொதுஜன பெரமுன கட்சி இன்று ஐ.தே.கவுக்கு அடிபணிந்துள்ளது

## சாகரவே காரணம் எனச் சாடுகின்றார் உதய கம்மன்பில

கட்சியின் கொள்கைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்த பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடிபணிந்துள்ளது என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டோம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நிர்வாகத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் தற்போது தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தலுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்துகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நிர்வாகத்தை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டார்களாயின் தாராளமாக தேர்தலை நடத்தலாம்தானே?

2024 ஆம் ஆண்டு தேர்தல் வருடம் என்று குறிப்பிடப் படுகிறது. ஆனால் மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை போன்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலையும் ஒத்திவைக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிகளை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை அரசியல் சூழ்ச்சிகளினால் பிற்போட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். வரலாற்றில் பல விளைவுகள் பதிவாகியுள்ளன.

கட்சியின் கொள்கைக்கு எதிராக நாங்கள் செயற்பட்டுள்ளோம் எனவும், எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள் எனவும் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.



பொதுஜன பெரமுன கட்சியின் அடிப்படை கொள்கைக்கும், கட்சி யாப்புக்கு எதிராக செயற்படும் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்பதற்காகவே கட்சியில் இருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுகிறோம்.

எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக சாகர காரியவசம் கடந்த ஒரு வருட காலமாக குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப் படவில்லை. கட்சியின் கொள்கைகளை நாங்கள் மீறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்த பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடிபணிந்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைவார்கள் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாடம் புகட்டுவோம்

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முறைமையை மாற்றுவது தொடர்பான யோசனைத் திட்டம் ஒன்றை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருக்கின்றமை, பொது தேர்தலையும் உரிய காலத்தில் நடத்தாமல் தள்ளிப் போடுவதற்கான எத்தனமா என்று எதிர்க்கட்சிகள் பலவும் சந்தேகமும் அச்சமும் கிளப்பியிருக்கின்றன.

தற்போதைய நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துவத்தின் கீழ் தெரிவு செய்யப்படுகின்றனர். இதனை மாற்றி, 160 உறுப்பினர்களைத் தொகுதி வாரியாகவும், எஞ்சிய 65 உறுப்பினர்களை மாகாண மற்றும் தேசிய ரீதியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் தெரிவு செய்வது குறித்து இப்போது ஆலோசிக்கப்படுகின்றதாம்.

இத்தகைய யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் 160 தொகுதிகளின் எல்லைகளையும் மீள நிர்ணயம் செய்யும் வகையில் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக் குழுவை நியமித்து அந்த தொகுதிகளை வரையறை செய்ய வேண்டும். அதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பது தெரியாத விடயமாகும். அது வரை பொதுத் தேர்தல் நடக்காமல் இழுபட வேண்டியதுதான்.

இதே முறையை மாகாண சபை தேர்தல் விடயத்திலும் கையாண்டு, தேர்தல் முறைமைகளை மாற்றுகிறோம் என்று முயன்று, அந்தத் தேர்தலையே நீண்ட காலமாக நடத்தவே முடியாமல் செய்யும் இக்கட்டு நிலைமையை ரணில் விக்கிரமசிங்கவின் முன்னைய நல்லாட்சி அரசு ஏற்படுத்தி விட்டது.

அதே வேலையை, பொதுத் தேர்தல் விடயத்திலும் நடைமுறைப்படுத்தி, அந்தத் தேர்தல்களுக்கும் மாகாண சபைத் தேர்தல்களுக்கு நேர்ந்த கதியை ஏற்படுத்த ரணில் விக்கிரமசிங்க முயல்கின்றாரோ என்ற சந்தேகம் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது . அது நியாயமான சந்தேகம்தான். ரணில் அத்தகைய நரித் தந்திர சாலிதான்.

ரணில் அரசின் பிரதான பங்காளி மொட்டுக்காட்சி. அதன் முக்கிய பிரமுகர் பஸில் ராஜபக்ஷவோ இத்தகைய தேர்தல் சீர்திருத்தத் திட்டம் குறித்துத் தங்களுடன் பேசப்படவே இல்லை என்கிறார்.

ஆக, ஜனாதிபதித் தேர்தல் சமயங்களில் ஜனாதிபதி ஆட்சி முறைமை மாற்றப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர்தான் பேசி வந்தனர் என்றும் பஸில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால், அவரின் சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ 2005 ஜனாதிபதி தேர்தலில் முதல் தடவையாக போட்டியிட்டபோதே, அந்தத் தேர்தலுடன் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையைத் தாம் முடிவுக்கு கொண்டு வருவார் என எழுத்தில் வாக்குறுதி வழங்கியே, களத்தில் இறங்கி வெற்றி பெற்றார் என்பதை பஸில் ராஜபக்ஷ தமக்கு வசதியான விதத்தில் மறைக்க - மறக்க - முயல்கின்றார்.

எது, எப்படி என்றாலும், என்ன காரணங்களின் அடிப்படையிலும், உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப்போடும் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு இலங்கை மக்கள் இடம் கொடுக்கக் கூடாது. அது முக்கியம். ஏற்கனவே உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் தள்ளி வைக்கப்பட்டமைக்காகச் சரியான பாடத்தை - படிப்பினையை - ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் புகட்ட வேண்டியிருக்கின்றது என்பதையும் மறக்கக் கூடாது.

## அரச வைத்திய அதிகாரிகள் எதிர்ப்பில் ஈடுபடத் திட்டம்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கொழும்பில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கு இதுவரை தீர்வு கிடைக்காமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இன்று இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

வாழ்க்கை செலவுகளுக்கு ஏற்ற வகையில், வைத்தியர்களுக்கான சம்பளத்தை வழங்கும் நடைமுறையை தயாரித்தல், வழங்கப்படும் எரிபொருளின் அளவை அதிகரித்தல், சம்பளத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளைக் குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அவற்றுள் அடங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்



வாகன விபத்தில் ஆண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பதுளை – பசறை பிரதான வீதியில் லிசாகோஸ் முன்பாக நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சிறிய லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## மழை காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று மீளத் திறப்பு

மழை காரணமாக மூடப்பட்டிருந்த காலி, மாத்தறை மாவட்டங்களின் பாடசாலைகள் மீண்டும் இன்று (11) திறக்கப்படவுள்ளன.

எனினும், வெள்ளம் தொடர்ந்தும் தேங்கி நிற்கும் பாடசாலைகளைத் திறக்கின்றமை தொடர்பில் உரிய வலயக் கல்வி பணிப்பாளர்களே தீர்மானிப்பார்கள் என்று மாத்தறை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வெள்ளத்தால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

கடந்த சில நாட்களாக நிலவிய மழையுடனான சீரற்ற காலநிலையால் காலி , மாத்தறை மாவட்டங்கள் அதிகளவு பாதிக்கப்பட்டிருந்தன.

மாத்தறை மாவட்டத்தில் 24 ஆயிரத்து 403 பேர் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை , கடுவன்கொட , நாரங்கொட, தல்கஹகொட, துடாவ, பிலதுவ உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சிலர் பாதுகாப்பு அணையில் கூடாரங்கள் அமைத்து இருந்துள்ளனர்.

பிலிதுவ, வல்பொல, தொடுபல பகுதிகள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அக்குரஸ்ஸ, அதனை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை படிப்படியாக குறைவடைந்து வருகின்றது.

மாத்தறை – நாவிமத, நாதுகல, வெஹரகம்பிட்டிய, கத்துவ, மாலிம்பட உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் வெள்ளம் வடிந்தோடி வருகின்றது.

எனினும், கத்துவ வடக்கு, நாவிமத உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது.

வெள்ளம் நிறைந்துள்ள பகுதிகளிலுள்ள மக்கள் மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல விகாரைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

# இந்தியா - சீனா இடையே பதற்றம்: நவீன ஆயுதங்கள் வாங்க ஒப்பந்தம்



இந்திய இராணுவத்துக்கு 23,500 கோடி ரூபா பெறுமதியான நவீன ரக ஆயுதங்களை வாங்க ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

இந்தியா, சீனா இடையே கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் கிழக்கு லடாக் அருகே அசல் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் மோதல் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்தப் பதற்றத்தைத் தணிக்க இந்தியா, சீன இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறு கட்ட பேச்சு நடைபெற்று வருகிறது.

இந்த பதற்றமான சூழ்நிலையில், இந்தியாவின் ஆயுதப்படைகளுக்கு நவீனரக ஆயுதங்கள் வாங்குவதற்கு 23,500 கோடி இந்திய ரூபா பெறுமதியான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

அவசர கால ஆயுதக் கொள்முதல் திட்டத்தின் கீழ் ஆயுதங்கள், ட்ரோன்கள், ஏவுகணைகள், ராடார் உள்ளிட்ட கண்காணிப்பு கருவிகள், தகவல் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள் ஆகிய வற்றை வாங்குவதற்காக பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இதில் அதிகபட்சமாக இராணுவத் துக்காக 70 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. கடற்படைக்கு 65 ஒப்பந்தங்களும் விமானப்படைக்கு 35 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி உள்ளன. இதில் இராணுவத்துக்கு 11 ஆயிரம் கோடி ரூபாவிலும், இந்திய விமானப் படைக்கு 8,000 கோடி ரூபாவிலும், கடற்படைக்கு 4,500 கோடி ரூபாவிலும் ஒப்பந்தங்கள் கையெழுத் தாகியுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் 1,500 கோடி ரூபா மதிப்பிலான ட்ரோன்கள் வாங்குதல், ட்ரோன் எதிர்ப்பு கருவிகளை வாங்குதல் உள்ளிட்டவையும் அடங்கும் என்று இந்திய இராணுவ தகவல்கள் தெரிவிக் கின்றன.

# இந்தியா - தான்சானியா இடையே ஆறு ஒப்பந்தங்கள் கையெழுத்து!



பிரதமர் நரேந்திர மோடி தான்சானியா ஜனாதிபதி சாமியா சுலுஹு ஹசன் முன்னிலையில், இரு நாடுகளுக்கு இடையே 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் அழைப்பின் பேரில், தான் சானியா ஜனாதிபதி சாமியா சுலுஹு ஹசன் மூன்று நாள் பயணமாக கடந்த 8 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அவருடன் அந்த நாட்டு அரச அதிகாரிகள், வர்த்தக சமூக உறுப்பினர்கள் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக்குழுவினரும் வந்தனர். தான்சானியா ஜனாதிபதிக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்றுமுன்தினம் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, தான்சானியா ஜனாதிபதியும் இந்திய பிரதமரும் இருதரப்பு பேச்சுகளை நடத்தினர். இதன் தொடர்ச்சியாக, இரு நாடுகளுக்கும் இடையே 6 ஒப்பந்தங்கள் கையெழுத் தாகின.

இதையடுத்து, கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும், இந்திய-தான்சானியா உறவை உத்திசார் கூட்டு ஒத்துழைப்பு நிலைக்கு உயர்த்துவதாக இரு தலைவர்களும் அறிவித்தனர். கடல்சார் பாதுகாப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு, வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் முதலீடு போன்ற விவகாரங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட இது உதவும் என்று இரு தரப்பினரும் குறிப்பிட்டனர்.

வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டுஆணைக்குழுசெயல்முறை வாயிலாக உயர்மட்ட அரசியல் கலந்துரையாடல்களை தொடர்வதற்கும், தலைவர்களுக்கிடையிலான இருதரப்பு சந்திப்புக்களுக்கும் இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர்.

# காஸா பகுதியில் ஸ்ரேல் கடும் வான்வழித் தாக்குதல்: ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்!



பாலஸ்தீனுடனான தமது 75 ஆண்டுகால மோதல் வரலாற்றில் இஸ்ரேல் நேற்று காஸா பகுதியில் கடுமையான வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஒரு இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமான காஸா மக்கள் வீடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை உள்ளிட்ட இடங்களில் பலர் பதுங்கிக் கொண்டிருக்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது.

அத்துடன், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காஸாவில் சுமார் 770 பேர் உயிரிழந்துள்ளனர். 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என காஸாவின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஹமாஸ் தரப்பினரின் தாக்குதல்களால் உயிரிழந்தர்களின் எண்ணிக்கை 900 ஐ எட்டியுள்ளது என இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் பொதுமக்கள் வீடுகள், தெருக்கள், நடன விருந்தகங்களில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்களும் சில வெளிநாட்டவர்களும் பணயக் கைதிகளாக காஸாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த மூன்று காஸா ஊடகவியலாளர்கள் இஸ்ரேலிய ஏவுகணை தாக்குதலில் கொல்லப்பட்டுள் ளனர் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த மோதல்களில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மியான்மாரில் புலம்பெயர்ந்தோர் தங்கியிருந்த முகாம் மீதான தாக்குதலில் 29 பேர் உயிரிழப்பு!





சீன எல்லைக்கு அருகில் வடகிழக்கு மியான்மாரில் புலம்பெயர்ந்தோர் தங்கியிருந்த முகாமொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 29 பேர் உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பல தசாப்தங்களாக சுயாட்சி பிராந்தியத்துக்காக போராடி வரும் குழுக்களில் ஒன்றான கச்சின் சுதந்திர அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள முகாம் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சின் மாநிலத்தில் கடந்த 63 ஆண்டுகளாக மோதல் இடம்பெற்று வருகிறது.

அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் பிற கிளர்ச்சிக் குழுக்களுக்கு கச்சின் குழுவின் ஆதரவு பெருகி வருவதால், கடந்த ஆண்டு அந்த அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஆயுதப் படைகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

2021ஆம் ஆண்டு இராணுவ சதிப்புரட்சியால், மக்களால் தேர்தெடுக்கப்பட்ட அரசாங்கம் வெளியேறியதிலிருந்து மியன்மாரின் பெரும்பகுதி பரந்த உள்நாட்டுப் போரில் சிக்கியுள்ளது.

இராணுவம் அதிகாரத்தைக் கைபற்றியதில் இருந்து எதிர்க்கட்சி களின் கட்டுப்பாட்டில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களை நோக்கி வான் வழித் தாக்குதல்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன.

நாடுகடத்தப்பட்ட தேசிய ஒற்றுமை அரசாங்கம், குறித்த முகாம் மீதான தாக்குதலுக்கு இராணுவ ஆட்சியாளர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

எனினும், இராணுவ ஆட்சி அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சாவ் மின் துன், இந்தத் தாக்குதலின் பின்னணியில் இராணுவம் இருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுக்களை நிராகரித்துள்ளார்.



# பாகிஸ்தானுடனான ஆட்டத்தையும்
# தவறவிட்டது இலங்கை

## இங்கிலாந்திடம் மடங்கியது பங்களாதேஷ்

பாகிஸ்தானுடனான உலகக் கிண்ண லீக் போட்டியில் இலங்கை அணி தோற்றது.

13ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற பகல் – இரவு ஆட்டத்தில் இலங்கை – பாகிஸ்தான் அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, குசல் மெண்டிஸ் (122), சதீர சமரவிக்கிரம (108) ஆகியோரின் சதங்களும், பதுன் நிசங்கவின் (51) அரைச்சதமும் கைகொடுக்க 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 344 ஓட்டங்களைக் குவித்தது.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் கூடுதலாக ஹசன் அலி 4 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

பின்னர் 345 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு, அப்துல்லா ஷாபிக் (113), மொஹமட் ரிஷ்வான் (131 ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் சதங்கள் கைகொடுக்க, 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 345 ஓட்டங்களைத் தொட்டது.

இதன்மூலம் பாகிஸ்தான் அணி, 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் கூடுதலாக டில்ஷான் மதுஷங்க 2 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக பாகிஸ்தானின் மொஹமட் ரிஷ்வான் தெரிவானார்.

பாகிஸ்தான் தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்ததன் மூலம் புள்ளிப்பட்டியலில் 4 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதேவேளை தர்மசாலாவில் நடைபெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 137 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்த அணி, டேவிட் மலனின் (140) சதத்தின் உதவியுடன், 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 364 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் ஆடிய பங்களாதேஷ் அணி, 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 227 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதனடிப்படையில் இங்கிலாந்து அணி 137 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இங்கிலாந்தின் டேவிட் மலன் தெரிவானார்.






# ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா கரிசனையோடு செயல்பட வேண்டும்

## மாலதி நினைவு நிகழ்வில் ஸ்ரீதரன் எம்.பி. வலியுறுத்தல்

ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா எப்பொழுதும் கரிசனையோடு செயல்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்

முதல் பெண் மாவீரர் 02ம் லெப்டினன் மாலதியின் 36 ஆவது ஆண்டு வணக்க நிகழ்வு நேற்று கிளிநொச்சி தருமபுரத்தில் இலங்கைத் தமிழரசு கட்சியினுடைய ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு நினைவு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அதாவது தொடர்ந்து உரையாற்றுகையில் –

கடந்த 36 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவத்துடன் போராடி மாலதி அவர்கள் வீரச்சாவை தழுவிக் கொண்டார் . ஈழத் தமிழர்களுக்கு எதிராக இந்திய அரசு போர் தொடுத்தது. பல அழிவுகளை ஏற்படுத்தியது. ஆனாலும் இன்றும் எங்களுக்கான தீர்வை பெற்றுத் தரும் என்பதில் நாங்கள் இந்தியாவை வேண்டி நிற்கின்றோம்.



நாங்கள் கியூபாவையோ அல்லது ரஷ்யாவையோ நாடவில்லை. அல்லது சீனாவிடம் தீர்வு பற்றிப் பேசவில்லை. இந்தியாவினால்தான் எங்களுடைய தீர்வு பற்றி பேசமுடியும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் தொடர்ந்தும் இருக்கின்றோம். – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

நேற்றுக் காலை 9.30 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ஸ் நிர்மலநாதன் மற்றும் இலங்கைத் தமிழரசு கட்சியின் செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் எனப. பலர் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தினர்.







# கடன்களின் மறுசீரமைப்பிற்கு சீன வங்கியுடன் ஆரம்பகட்ட உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது

இலங்கை பெற்ற கடன்களின் மறுசீரமைப்பிற்கு சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியான எக்ஸிம் வங்கியுடன் ஆரம்பகட்ட உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது என்று ப்ளூம்பெர்க் (Bloomberg) இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவை தவிர ஏனைய இருதரப்பு கடன் வழங்குநர்களும் இலங்கைக்குத் தாம் வழங்கிய கடன்களை மறுசீரமைப்பதற்கு எதிர்வரும் சில தினங்களில் இணக்கம்தெ ரிவிக்கவுள்ளனர்.

இலங்கையின் கடன் தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கி கடந்த மாதம் இணக்கப்பாட்டை எட்டியதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வெந்தபின் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த ஒப்பந்தம் தொடர்பிலான கூடுதல் தகவல்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை என ப்ளூம்பெர்க் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஏனைய கடன் வழங்குநர்களுக்கு இடையிலான கலந்துரையாடலில் சீன நிதி நிறுவனங்கள் கண்காணிப்பு மட்டத்தில் பங்குபற்றின என்று சீன வெளிவிவகார அமைச்சர் ஊடகவியலாளர் சந்திப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கையின் இருதரப்பு வெளிநாட்டுக் கடனில் சுமார் 51 வீதத்தை சீனா வழங்கியுள்ளது. இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட இருதரப்பு கடன் வழங்குநர்கள் சீனாவுடன் அல்லது சீனாவின் பங்களிப்பு இன்றி கடன் மறுசீரமைப்பிற்கான உடன்பாட்டை எட்டுவதாக அண்மையில் தெரிவித்திருந்தனர்.

மொராக்கோவில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்தக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட திட்டமிட்டுள்ளனர்.


அங்கத்துவ நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கான கண்காணிப்பு நடவடிக்கையின் ஒருங்கிணைந்த கூறுகளான ஆய்வுகள் மற்றும் எதிர்வு கூறல்கள் உள்ளடங்கிய வேர்ல்ட் எகனாமிக் அவுட்லுக் அறிக்கையை சர்வதேச நாணய நிதியம் நேற்று வெளியிட்டது.

இந்த அறிக்கையில் இலங்கை தொடர்பில் எவ்வித தகவல்களும் உள்ளடக்கப்படவில்லை என மொராக்கோவிலுள்ள நியூஸ்ஃபெஸ்ட்டின் அலுவலக செய்தியாளர் சுல்ஃபிக் ஃபர்ஸான் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதால், இலங்கை குறித்து அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் ஆய்வுப் பிரிவின் தலைவர் டேனியல் லெயி நியூஸ்ஃபெஸ்டிற்கு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழு, உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய உப தலைவர் மார்ட்டின் ரய்சரை சந்தித்துள்ளனர்.

இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க, அதிகபட்ச அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அவர் இதன்போது கூறியுள்ளார்.



# கொலை வழக்கில் 3 எதிரிகளுக்கு மன்று மரண தண்டனை விதிப்பு!

1992 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்றில் குற்றஞ் சாட்டப்பட்ட மூவருக்கு களுத்துறை மேல் நீதிமன்றம் மரண த ண்டனை விதித்துள்ளது.

நவுந்துடுவ பிரதேசத்தில் மீகம வத்தை பகுதியை சேர்ந்த நபர் தாக்கிக் கொலை செய்தனர் என இவர்கள் மூவருக்கும் எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

பல வருடங்களாக இடம்பெற்று வந்த இந்த வழக்கில் 3, 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளுக்கே நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கொலைச் சம்பவத்தின் முதலாவது பிரதிவாதிக்கு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது சந்தேகநபர் உயிரிழந்துள்ளார்.



# தேராவில் கிராம மக்களினுடைய பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேராவில் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகளுடன–ான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல ஒரு மணிக்கு தேராவில் பொது நோக்கு மண்டபத்தில் சமூக செயற்ப்பாட்டாளர் வேலு தியாகராசா தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் தி.ஜெயகாந்த், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகக் காணிக்கிளை உத்தியோகத்தர் இரங்கவேள், தேராவில் கிராம அலுவலர் திருநாவுக்கரசு உமாயிதன், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிராமத்தில் காணியற்றவர்களின் காணிப் பிரச்சினை, வடிகால் பிரச்சினை, ஆவணங்கள் இல்லாத பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் முன்மொழியப்பட்டன.














# கறுப்பு முகக் கவசம் அணிந்து முல்லை நீதிபதிகள் பணியில்!

(சண்முகம் தவசீலன்)

கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் நீதிமன்ற தொடர் பணிப்பகிஷ்கரிப்பை நிறுத்தி, கறுப்பு மாஸ்க் அணிந்து, வழக்குகளில் முன்னிலையாகின்றனர் முல்லைத்தீவு சட்டத்தரணிகள்.

முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் முன்னெடுக்கும் தொடர் நீதிமன்ற பணிப் பகிஷ்கரிப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை எட்டாவது நாளாக இடம்பெற்ற நிலையில் அன்றைய தினம் கொழும்பில் உயர்நீதிமன்றம் முன்பாக இடம்பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து தமது நீதிமன்ற தொடர் பணிப்பகிஷ்கரிப்பை நிறுத்தி கறுப்பு மாஸ்க் அணிந்து வழக்குகளில் ஆஜராகவுள்ளனர் என முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த.பரஞ்சோதி தெரிவித்தார் .

அந்த வகையில் நேற்று தொடர் பணிப் பகிஷ்கரிப்பை நிறுத்திய முல்லைத்தீவு சட்டத்தரணிகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் செயல்பாடுகளில் கறுப்பு மாஸ்க் அணிந்தவாறு பங்குபற்றியமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நீதிபதிக்கான நீதி கோரும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக இந்த கறுப்பு மாஸ்க் அணிந்தவாறு தாங்கள் இந்தத் தொடர் நடவடிக்கையை முன்னெடுக்கின்றனர் எனவும், நீதிபதிக்கான உரிய நீதி கிடைக்கப்பெறாத பட்சத்தில் தொடர்ந்தும் பல்வேறு வகையில் தமது போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.



# அழகுசாதனப் பொருள்களை காலாவதி திகதியின்றி விற்பனை செய்யும் வர்த்தகர்களின் மீது நடவடிக்கை

பத்தரமுல்லையிலுள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றில் விலை, காலாவதி திகதிகள் காட்சிப்படுத்தப்படாத அழகுசாதனப் பொருள்கள் நுகர்வோர் அதிகாரசபை பிரிவின் சோதனையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்தக் கடையின் விற்பனையாளர் தோல் வெண்மைக்கும் அழகுசாதனப் பொருள்களுக்கும் பயன்படுத்தப்படும் லோஷன்களில் பொருளின் விலை, உற்பத்தி மற்றும் காலாவதி திகதிகள் காட்சிப்படுத்தப்படாமல் விற்பனை செய்கிறார் எனக் கிடைத்த தகவலின் பேரில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் சாந்த நிரியெல்லவின் நடவடிக்கையின் கீழ் கடையின் உரிமையாளர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு உரிய தகவல் இன்றி பொருள்கள் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.




# தேசியமட்ட மகளிர் உதைபந்தாட்டம்; மகாஜனவின் இரு அணிகள் சாதிப்பு

## 17 வயதுக்குட்பட்ட அணி சம்பியன்

## 20 வயதுப் பிரிவு இரண்டாமிடம்

(அ.அஸ்வர்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மகளிர் உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட அணி சாம்பியனாகியுள்ளது. அதேவேளை, 20 வயதுக்குட்பட்டஅணி இரண்டாமிடம் பெற்றுள்ளது.

யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் (09) நடைபெற்ற இறுதிப்போட்டியில் குருநாகல் கவுசி-கம மத்திய கல்லூரியை எதிர்கொண்ட மகாஜனாக் கல்லூரியின் 17 வயதுக் குட்பட்ட அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, மகாஜனக் கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட அணி பொலனறுவை பெண்டிவெவா மத்திய கல்லூரியை எதிர்கொண்டது.

இதில், பொலன்னறுவை பெண்டிவெவா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற, மகாஜனா இரண்டாமிடம் பெற்றது.

20 வயதுக்குட்பட்ட மகாஜன பெண்கள் அணி வடமாகாண மட்டத்தில் 2014 தொடக்கம் 2023 வரையான காலப் பகுதிக்குள் 8 தடவைகள் சம்பியனாகி சாதனை படைத்துள்ளது.

அதேவேளை, தேசிய மட்டத்தில் மகாஜன 17 வயதுக்குட்பட்ட மகளிர் அணி தொடர்ந்து இரண்டாவது வருடமாகவும் இம்முறை சம்பியனாகி சாதனை படைத்துள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 11.10.2023




மேஷ ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் சவால்கள் நிறைந்த நாளாக இருக்கும். அதனால் இன்றைய நாளில் எல்லா செயல்களையும் பொறுமையுடன் செய்ய வேண்டும். மேலும் பனியிடத்தில் குறித்த நேரத்தில் பணிகளை செய்து முடிக்க இயலாது. துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. மேலும் இன்றைய நாளில் ஆரோக்கியம் ரீதியான செலவுகள் வரக்கூடும்.




ரிஷப ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் மிதமான பலன் களை அளிக்கும் நாளாக காணப்படுகிறது. அதனால் இன்று நிதானமாக செயல்படுவது நல்லது. அலுவலகசூழல் திருப்பதி அளிக்கும் வகை யில் இருக்காது. துணையிடம் பேசும் போது வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. அதேபோல் இன்றைய நாளில் நிதிநிலை மிகவும் குறைவானதாகக் காணப்படும். ஆகையால் இன்றைய நாளில் ஆன்மீக வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.




மிதுன ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் விருப்பங்கள் நிறைந்த நாளாக அமையும். நீங்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றி அளிக்கும் விதமாக முடியும். பணியிடத்தில் உங்களுக் கான பாராட்டும், அங்கீகாரமும் இன்று கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. கணவன் மனைவி இடையே மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். மேலும் இன்று பண வர வானது நீங்கள் எதிர்பார்த்ததை விட அளவுக்கு அதிகமாக காணப்படும்.




கடக ராசிக்காரர்களுக்கு இன் றைய நாள் பதற்றம் நிறைந்த நாளாக அமையும். அதனால் இன்று முக்கிய முடிவுகள் எடுப் பதை தவிர்ப்பது நல்லது. குறித்த நேரத் தில் பணிகளை செய்து முடிக்க திட்டமிட்டு செயல்பட வேண்டும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு காணப்படும். அதேபோல் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவில் மட்டுமே நிதிநிலை இருக்கும்.




சிம்ம ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் சாதகமான நாளாக இருக்காது. பணிகள் அதிகமாக காணப்படுவதனால் பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரி டும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் மற்றும் கணவன் மனைவி இடையே வீண் விவாதங்கள் வந்து விலகும். பண விஷயத் தில் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். எனவே ஆன்மீக வழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி கிடைக்கும்.




கன்னி ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் பொறுமை மற்றும் நம்பிக்கையை கடைப் பிடிக்க வேண்டிய நாளாக உள்ளது. அலுவலகத்தில் வேலையைச் செய்து முடிக்க திறம்பட திட்டமிட்டு செயல்படுவது மிகவும் அவசியம். துணையிடம் பேசும் போது உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி பேசுவது நல்லது. பண வரவை பொறுத்தவரை மிகவும் குறைவாக இருக் கும்.




துலாம் ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் மகிழ்ச்சி நிறைந்த நாளாக இருக்கும். அலுவலகச்சூழல் திருப்தி அளிக்கும் வகையில் காணப்படும். கணவன் மனைவி இடையே நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒற்றுமை அதிகரித்துக் காணப் படும். மேலும் அளவுக்கு அதிகமாக நிதி நிலை காணப்படும்.




விருச்சிக ராசிக்காரர்களுக்கு முனேற்றம் நிறைந்த நாளாக அமையும். அலுவலகத்தில் உங்களுக்கான பணிகளை சிறப்பாக செய்து முடிக்க திற மையினை வெளிப்படுத்த வேண்டியவது மிகவும் அவசியம். துணைவியிடம் மனம் விட்டு பேசுவதன் மூலம் மகிழ்ச்சி அதி கரித்து காணப்படும். மேலும் நீங்கள் எதிர் பார்த்ததை விட அளவுக்கு அதிகமாக பண வரவு இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -11.10.2023




தனுசு ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் மந்தமான நாளாகக் காணப்படும். ஆகையால் எந்தவொரு செயலையும் சுறு சுறுப்பாக செய்வது நல்லது. வழக்கத்திற்கு மாறாக வேலை இருப்பதனால் கவனமாக பணிகளை செய்வது நல்லது. துணையிடம் நட்பான முறையில் பேசுவது நல்லது. அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் அளவில் மட்டுமே நிதி நிலை இருக்கும்.




கும்ப ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாளாக இருக்கிறது. அதனால் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றி அளிக்கும் விதமாக முடியும். பணியிடத்தில் உங்களுக்கான பாராட்டுகள் மற்றும் வெற்றியானது அதிகமாகக் காணப்படும். துணையிடம் சந்தோசமாக பேசுவீர்கள். மேலும் பண வரவு நடுநிலையுடன் காணப்படும்.




மகர ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் தன்னம்பிக்கை யற்ற நாளாக காணப்படும். ஆகவே இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். கணவன் மனைவி இடையே வீண் விவாதங்கள் ஏற்படும். பண விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. மேலும் பணத்தினை பார்த்து செலவு செய்ய வேண்டியது அவசியம்.




மீனராசிக்காரர்கள் இன்றைய நாள் உற்சாகம் நிறைந்த நாளாக காணப்படும். நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். கணவன் மனைவி இடையே அன்பைப் பகிர்ந்து கொள்வீர்கள். மேலும் பண வரவு நடுநிலையுடன் இருப்பதனால் அதனை வைத்து அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



PCP Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park